# <u>சிவகங்கை நகராட்சி</u>

## <u>சாதாரணக்கூட்டம்</u>

2019ம் ஆண்டு பிப்ரவரி 28ம் நாள் விளம்பி வருடம் மாசி 16ம் நாள் வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் அறையில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

2019ம் ஆண்டு பிப்ரவரி 28ம் தேதி மாலை 4.00 மணிக்கு நடைபெற்ற நகர்மன்ற சாதாரணக்கூட்டத்தின் நடவடிக்கைகள்

**முன்னிலை திரு.பி.அயூப்கான், பி.காம்.,எம்.ஏ.,பி.எட்.,**

**தனி அலுவலர்,**

**சிவகங்கை நகராட்சி.**

# சிவகங்கை நகராட்சி

## சாதாரணக்கூட்டம்

2019ம் ஆண்டு பிப்ரவரி 28ம் நாள் விளம்பி வருடம் மாசி 16ம் நாள் வியாழக்கிழமை மாலை 4.00 மணிக்கு தனி அலுவலர் அறையில் சாதாரணக்கூட்டம் நடைபெறும். அவ்வமயம் கீழ்க்கண்ட பொருள்கள் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும்

### பொருள்கள்

1. சிவகஙகை நகராட்சி ஆணையாளர் அவர்களின் 2019 ஆம் ஆண்டு பிப்ரவரி மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

தீர்மான எண்.. 362 –அனுமதிக்கப்பட்டது.

2. சிவகஙகை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் சிவகஙகை நகராட்சியில் குப்பைகளை சேகரம் செய்யும் மின்கலம் வாகனம் வாஙகுதல் பணிக்கு தொகை ரூ.43.20லட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்..1191/பி3/2019 நாள்..21.01.2019ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 14.02.2019ல் அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் ஆறு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் வரப்பெற்றது தொழில் நுட்ப அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தாரர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளார்கள். ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பிரியம் இன்டரிஸ் இன்ஞினியரிங பிவிடி லிமிடெட் | மதிப்பீட்டு ரேட்டை விட 0.01% குறைவு |
| 2. | அருண் இந்தியன் மோட்டார்ஸ் சேலம் | மதிப்பீட்டு ரேட்டை விட 0.44% குறைவு |

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைக் காட்டிலும் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள பிரியம் இன்டர்ஸிஸ் இன்ஞ்னியரிங பிவிடி லிமிடெட் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 363 —அனுமதிக்கப்பட்டது.

3. சிவகஙகை நகராட்சி UID 55MT திட்டத்தின் சுழல் நிதியின் கீழ் 2018—19ம் ஆண்டிற்கு நகராட்சி எல்லைக்குள் குடிநீர் இணைப்பு இல்லாத கட்டிடஙகளுக்கு குடிநீர் இணைப்பு வழஙகும் பணி (8589 எண்ணம்) வழஙகுதல் பணிக்கு தொகை ரூ.305.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாகப் பொறியாளர் சென்னை அவர்களின் செயல்முறை கடித ந.க.எண்..13277/2018/DO2 நாள்..03.12.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 30.01.2019 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றது முறையே 1. MM கன்ஸ்ட்ரக்சன்ஸ், சாயல்குடி 2. P. முருகன் ஒப்பந்ததாரர் சிவகஙகை இவர்களின் முறையாக மெர்சர்ஸ் எம்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ் தொழில் நுட்ப அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டுள்ளனர். முருகன் ஒப்பந்ததாரர் தொழில் நுட்ப ஒப்பந்தம் பெறவில்லை. எனவே மெர்சர்ஸ் எம்.எம் கன்ஸ்ட்ரக்சன்ஸ் ஒப்பந்தப்புள்ளியானது 01.02.2019 அன்று விலை விகித ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டதில் 4.98 மதிப்பீடு தொகையை விட கூடுதலாக கொடுத்துள்ளார். எனவே அன்னார்க்கு விலை விகிதம் குறைத்து கொடுக்க அறிவுறுத்தப்பட்டது. அதன் அடிப்படையில் அன்னார் 14.02.2019 அன்று 4.96 மாசு குறைத்துக் கொடுத்துள்ளார் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | |
|---|---|
| மெசர்ஸ் எம்.எம். கன்ஸ்ட்ரக்சன்ஸ், சாயல்குடி இராமநாதபுரம் மாவட்டம் | மதிப்பீட்டு தொகையிலிருந்து 4.96% அதிகம் |

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் நிதியிழப்பு மற்றும் கால விரயம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மற்றும் கூடுதல் வைப்பு தொகையை செலுத்த முன் அனுமதி வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 364 —அனுமதிக்கப்பட்டது.

4. சிவகஙகை நகராட்சி பொறியியல் பிரிவில் இயஙகி வரும் TN63J9787 ஈப்பு வாகனத்திற்கு ஏற்கனவே வாஙகப்பட்டு இரண்டு வருடஙகள் முடிந்த பழைய பேட்டரியை கொடுத்துவிட்டு புதிய பேட்டரி வாஙக கீழ்க்கண்ட நிறுவனத்திடம் இருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பாலாஜி பேட்டரி ஹவுஸ் தொண்டி ரோடு, சிவகஙகை | ரூ.6000/— |

| | | |
|---|---|---|
| 2. | ஸ்ரீ காளிஸ்வரி ஆட்டோ ஸ்டோர், பிள்ளைவயல் காளியம்மன் கோவில் ரோடு, சிவகஙகை. | ரூ.6325/– |
| 3. | ஸ்ரீ சரவணா ஆட்டோ ஸ்பேர்ஸ், இரயில்வே ஸ்டேசன் ரோடு, சிவகஙகை | ரூ.6360/– |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பிட்டைக் காட்டிலும் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள பாலாஜி பேட்டரி ஹவுஸ் சிவகஙகை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கவும் மேற்காணும் புதிய பேட்டரியை வாஙகி பொருத்தும் பணிக்கு பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 365 –அனுமதிக்கப்பட்டது.

**5.** சிவகஙகை நகராட்சி பொறியியல் பிரிவில் இயஙகி வரும் TN63L6589 ஈப்பு வாகனத்திற்கு ஏற்கனவே வாஙகப்பட்டு இரண்டு வருடஙகள் முடிந்த பழைய பேட்டரியை கொடுத்துவிட்டு புதிய பேட்டரி வாஙக கீழ்க்கண்ட நிறுவனத்திடம் இருந்து மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன. வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | பாலாஜி பேட்டரி ஹவுஸ் தொண்டி ரோடு, சிவகஙகை | ரூ.6000/– |
| 2. | ஸ்ரீ காளிஸ்வரி ஆட்டோ ஸ்டோர், பிள்ளைவயல் காளியம்மன் கோவில் ரோடு, சிவகஙகை. | ரூ.6445/– |
| 3. | ஸ்ரீ சரவணா ஆட்டோ ஸ்பேர்ஸ், இரயில்வே ஸ்டேசன் ரோடு, சிவகஙகை | ரூ.6360/– |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பிட்டைக் காட்டிலும் குறைந்த விலை விகிதம் கொடுத்துள்ள பாலாஜி பேட்டரி ஹவுஸ் சிவகஙகை நிறுவனத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கவும் மேற்காணும் புதிய பேட்டரியை வாஙகி பொருத்தும் பணிக்கு பொது நிதியில் செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 366 –அனுமதிக்கப்பட்டது.

**6.** சிவகஙகை நகர் வாரச்சந்தை ரோடு வார்டு எண்..னு பிளாக் எண்..4, நகரளவு எண்..104ல் புதிதாக கட்டிடம் கட்ட திரு. பி.சுகர்னோ த/பெ. பக்கிரிசாமி என்பவர் கட்டிட அனுமதி கோரி விண்ணப்பம் செய்யப்பட்டது. மேற்படி இடம் நகரநில அளவு ஆவணஙகளில் வாரச்சந்தை ரோடு ( சிவகஙகை நகராட்சி ) பொது பாதை என குறிப்பிடப்பட்டு இருந்ததாலும், மேலும் பாதையானது பொது மக்கள் பயன்பாட்டில் உள்ளதால் கட்டிட அனுமதி மறுக்கப்பட்டது. கட்டிட அனுமதி மறுக்கப்பட்டதினை எதிர்த்து திரு. பி.சுகர்னோ என்பவர் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளையில் தொடர்ந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கு எண்..1782/2017 மற்றும் டபிள்யூ.எ.(எம்.டி) எண்..62/2011ல் நகராட்சி சார்பாக வழக்கில் ஆஜராகி வக்காலத்து படிவம் தாக்கல் செய்தும் வழக்கிற்கு தேவையான பத்தி வாரி அறிக்கை தயார் செய்து வழக்கை நடத்திச் செல்ல

நகராட்சி வழக்கறிஞர் திரு. ஜே.லாரன்ஸ் அவர்களின் 28.01.2019ம் தேதிய கடிதத்தின் படி வழக்குக் கட்டிடம் ரூ.7500/– (ஏழாயிரத்தி ஐந்நூறு) மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

வழக்குக் கட்டணம் ரூ.7500/– (ஏழாயிரத்தி ஐந்நூறு மட்டும்) சென்னை உயர்நீதிமன்ற நகராட்சி வழக்கறிஞர் திரு. ஜே.லாரன்ஸ் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மான எண்.. 367 –அனுமதிக்கப்பட்டது.

7. இந்நகராட்சி திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் சேகரம் செய்யப்படும் குப்பைகளிலிருந்து அணுகு சாலை மற்றும் சுற்றுச் சுவருடன் கூடிய நுண் உரம் செயலாக்க மையம் அமைப்பதை எதிர்த்து திரு. சோனைமுத்து என்பவர் சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்..டபிள்யூபி (எம்.டி) எண்..283/2019ல் நகராட்சி சார்பாக வழக்கில் வக்காலத்து படிவம் தாக்கல் செய்தும் வழக்கிற்கு தேவையான பத்தி வாரி அறிக்கை தயார் செய்து வழக்கில் நகராட்சிக்கு சாதகமாக தீர்ப்பு பெற்று தந்த வகையில் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு. ஜே. லாரன்ஸ் அவர்களுக்கு 28.01.2019ம் தேதிய கடிதத்தின் படி வழக்கு கட்டணம் ரூ.7500/–(ஏழாயிரத்தி ஐந்நூறு) மட்டும் வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

வழக்கு கட்டணம் ரூ.7500/–(ஏழாயிரத்தி ஐந்நூறு) மட்டும் நகராட்சி வழக்கறிஞர் திரு.ஜே. லாரன்ஸ் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மான எண்.. 368 –அனுமதிக்கப்பட்டது.

8. இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் பணிபுரியும் துப்புரவு பணியாளர்களுக்கு காலணி, கையுறை, சீருடைகள் உரிய காலங்களில் வழங்கப்படவில்லையென திரு. எம். மலைச்சாமி, தலைவர், துப்புரவு தொழிலாளர் மற்றும் ஆதிதிராவிடர் நலச்சங்கம் சார்பாக சென்னை உயர்நீதி மன்றம் மதுரை கிளையில் தொடர்ந்த வழக்கு எண்..டபிள்யூ பி (எம்.டி) எண்..1483/2019ல் நகராட்சி சார்பாக வக்காலத்து படிவம் தாக்கல் செய்தும், வழக்கிற்கு தேவையான பத்தி வாரி அறிக்கை தயார் செய்து வழக்கை நடத்திச் செல்ல வழக்கு கட்டணம் ரூ.7500/– (ஏழாயிரத்தி ஐந்நூறு) மட்டும் சென்னை உயர்நீதி மன்ற மதுரை கிளை நகராட்சி வழக்கறிஞர் திரு. ஜே.லாரன்ஸ் அவர்களின் 28.01.2019ம் தேதிய கடிதத்தின் படி வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

வழக்கு கட்டணம் ரூ.7500/–(ஏழாயிரத்தி ஐந்நூறு) மட்டும் வழக்கறிஞர் திரு.ஜே. லாரன்ஸ் அவர்களுக்கு வழங்க மன்றம் ஒப்புதல் வழங்கலாம். ஆணையாளர் மற்றும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று வழக்கு கட்டணம் வழங்கியமைக்கும் மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

தீர்மான எண்.. 369 –அனுமதிக்கப்பட்டது.

9. சிவகஙகை நகராட்சிக்கு சொந்தமான நீதிபதி ராஜசேகரன் சாலையில் உள்ள பஙக்ஸ்டால் வரிவிதிப்பு எண்..112/540 திரு. எஸ்.குழந்தைநாதன் என்பவருக்கு 01.04.2018 முதல் குத்தகை முடிவுற்ற நிலையில் மீண்டும் 01.04.2018 முதல் 31.03.2021 வரை புதுப்பித்தல் கட்டணமும், 15% வாடகை உயர்வு செய்யவும், மேலும் பஙக் ஸ்டாலின் பழைய வாடகை ரூ.575/– 01.04.2018 முதல் 15% உயர்வு செய்து ரூ.661/– GST ரூ.119/–யும் மொத்தம் ரூ.780/– ஐ மாத வாடகை என நிர்ணயம் செய்ய குத்தகை பொது மற்றும் சிறப்பு நிபந்தனைகளுக்கு உட்பட்டு புதுப்பித்து கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 370 –அனுமதிக்கப்பட்டது.

10. சிவகஙகை நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் 2018–19ன் கீழ் சிவகஙகை நகராட்சியில் நீர்தாரை இயந்திரம் வாஙகுதல் பணிக்கு தொகை ரூ.49.00 லட்சம் மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்..26788/பி3/2018 நாள்..29.10.2018ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு 22.01.2018 அன்று மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் நான்கு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வரப்பெற்று தொழில் நுட்ப அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்ததாரர்கள் தொழில் நுட்ப தகுதி பெற்றுள்ளார்கள் ஒப்பந்தப்புள்ளி திறக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | மெட்ராஸ் இன்ப்ஃரா, திருப்பூர் | மதிப்பீட்டு தொகையிலிருந்து 4.70% குறைவு |
| 2. | விஷ்ணு இன்ப்ஃரா ஸ்டர்ச்சர்ஸ், சூலூர் | மதிப்பீட்டு தொகையிலிருந்து 9.70% குறைவு |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

மறு ஒப்பந்தப்புள்ளி கோருவதால் ஏற்படும் நிதியிழப்பு மற்றும் கால விரயம் ஆகியவற்றை கருத்தில் கொண்டு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியை ஏற்கவும் மதிப்பீட்டை விட கூடுதலாக ஏற்படும் செலவினத்தை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மற்றும் கூடுதல் வைப்பு தொகையை செலுத்த முன் அனுமதி வழஙகியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 371 –அனுமதிக்கப்பட்டது.

11. அரசாணை (நிலை) எண்..84 சுற்றுச்சூழல் மற்றும் வனத்துறை நாள்..25.06.2018ன் படியும், நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ROC No 44555/2013/பி3 நாள்..28.02.2019ன் படியும், சிவகஙகை நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளில் ஒரு முறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியப்படும் பிளாஸ்டிக் பொருட்களை சேகரித்தல், வழஙகுதல்,

கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் போன்றவற்றை தடை செய்வது தொடர்பாக 1920ம் அதற்கு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 306(28A) ன் கீழ் துணை விதிகள் இயற்றவும், துணை விதிகளை மீறி செயப்படுவர்களுக்கு 1920ம் ஆண்டு தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 308A ன் கீழ் அபராதக் கட்டணம் நிர்ணயம் செய்து துணை விதியின் இயற்றவும், துணை விதிகளை மாவட்ட அரசிதழில் வெளியிடவும் நடவடிக்கைகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 372 –அனுமதிக்கப்பட்டது.

12. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயஙகி வரும் 1. TN63 B6459 2.TN63B6460 3.TN63AC4447 4.TN63F9889 5. TN63f9891 போன்ற வாகனஙகளுக்கு 2019–2020ம் ஆண்டிற்கு காப்பீடு தொகை செலுத்த கோரி கடிதம் வரப்பெற்றுள்ளது.

| | | |
|---|---|---|
| 1. | TN63 B6459 | ரூ.8298/– |
| 2. | TN63B6460 | ரூ.19521/– |
| 3. | TN63AC4447 | ரூ.31130/– |
| 4. | TN63F9889 | ரூ.43372/– |
| 5. | TN63f9891 | ரூ.43264/– |
| | மொத்தம் | ரூ.145585/– |

மேற்கண்ட தொகை ரூ.145585/– ஐ United India Insurance Company Limited, சிவகஙகை நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 373 –அனுமதிக்கப்பட்டது.

13. சிவகஙகை நகராட்சி சொத்து வரி பொது சீராய்வு 2018–19 முதலாம் அரையாண்டு முதல் வ சீராய்வு செய்யப்பட்டு முடியும் தருவாயில் உள்ளது. மேலும் சிவகஙகை நகராட்சியில் மொத்தம் சுமார் 16500 வரி விதிப்புகள் உள்ளன. இவை அனைத்திற்கும் சிறப்பு அறிக்கை / Special Notice மற்றும் Working Sheet ஆகியவை ஒவ்வொரு வரி விதிப்பிற்கும் பிரிண்ட் நகல் எடுத்தும், ஒரு நகல் வரிவிதிப்புதாரருக்கும் மற்றொரு நகல் அலுவலக கோப்பில் பைண்டிங செய்து வைக்கவும் பணிக்கப்பட்டுள்ளது. மேலும் கைப்பிரதி (வசூலுக்கு எடுத்துச் செல்ல ஏதுவாக – Hand Book) பிரிண்ட் நகல் எடுக்கவும், மொத்தம் சுமார் 55,000 நகல்களுக்கு மேல் எடுப்பதற்கு தற்பொழுது அலுவலகத்தில் பிரிண்டர் ஏதும் இல்லாத காரணத்தினால், ஒரு நகல் பெருக்கி இயந்திரம் மற்றும் பிரிண்டர் கேனன் 2004N மாடல் (DGS&D-GeM Price ) க்கு வாஙகுவதற்கு கீழே கண்டுள்ளவாறு மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டன. அவைகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

1. சூடி எலக்ட்ரானிக்ஸ், அண்ணா நகர் மதுரை – ரூ.85,426/–

2. ஷார்ப் கம்ப்யூட்டர் சிஸ்டம்ஸ், மதுரை – ரூ.98,260/–

3. இ கேர் சர்வீஸ், மதுரை – ரூ.1,01,750/–

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. வரிசை எண்..1ல் கண்ட மெசர்ஸ், சூடி எலக்ட்ரானிக்ஸ், மதுரை அவர்களின் விலைப்புள்ளி குறைவாக இருப்பதால், அதனை ஏற்கலாம்.
3. வரிச் சீராய்வு அவசர அவசியம் கருதி உடனே கேனன் 2004N மாடல் பிரிண்டர் வாஙகுவதற்கு மன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி விநியோக உத்திரவு வழஙகலாம்.
4. மேற்படி வரிச் சீராய்வு மேற்கொள்ளுவதற்கான செலவினத்திற்கு இந்நகராட்சி தனது மன்றத் தீர்மான எண்.. நாள்..01.10.2019ல் அனுமதி வழஙகியுள்ளது.

தீர்மான எண்.. 374 –அனுமதிக்கப்பட்டது.

14. சிவகஙகை நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயஙகி வரும் வாகனம் TN6AC1606 –ன் பழுது நீக்கம் மேற்கொள்ள வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்ஸிஸ், இன்டஸ்ரியல் எஸ்டேட், கப்பலூர், மதுரை. | மதிப்பீட்டுத்தொகை ரூ.1,11,547/– |
| 2. | எம்.ஆர். ஹைராலிக், மதுரை | மதிப்பீட்டுத்தொகை ரூ1,14,793/– |
| 3 | தமிழ்நாடு ஆட்டோ மொபைல் ஏஜென்ஸிஸ், வ.உ.சி தெரு, காரைக்குடி. | மதிப்பீட்டுத் தொகை ரூ.1,20,791/– |

<u>அலுவலகக்குறிப்பு:–</u>

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள ஜெயராஜ் ஆட்டோ மொபைல் ஏஜென்ஸிஸ், இன்டஸ்ரியல் எஸ்டேட், கப்பலூர், மதுரை. நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்றும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் படி பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 375 –அனுமதிக்கப்பட்டது.

15. சிவகஙகை நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயஙகி வரும் வாகனம் TN63AC4447 –ன் தகுதிச்சான்று பெற பழுதுப் பணிகள் மேற்கொள்ள வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீபாலசுப்ரமணியன்,ஆட்டோ கேரேஜ்,பாத்திமா நகர்,பைபாஸ் ரோடு,மதுரை. | மதிப்பீட்டுத்தொகை ரூ.79,466/– |
| 2. | SRSB ஆட்டோ கேரேஜ், முத்து நகர், திண்டுகல் ரோடு, மதுரை. | மதிப்பீட்டுத்தொகை ரூ91,697/– |
| 3 | ஸ்ரீ சிவ பாலகி ஆட்டோ மொபைல்ஸ், மேலக்கால் மெயின் ரோடு, கோச்சடை, மதுரை | மதிப்பீட்டுத் தொகை ரூ.87,412/– |

**அலுவலகக்குறிப்பு:–**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள ஸ்ரீபாலசுப்ரமணியன்,ஆட்டோ கேரேஜ்,பாத்திமா நகர்,பைபாஸ் ரோடு,மதுரை நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்றும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் படி பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 376 –அனுமதிக்கப்பட்டது.

16. சிவகஙகை நகராட்சி அம்மா உணவகத்தில் உள்ள பாய்லர் அடுப்பில் ஏற்பட்ட பழுதுகளை சரி செய்து கொடுக்க வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| | | |
|---|---|---|
| 1. | ஸ்ரீஜோதி மார்டன் கிச்சன் எக்கியூப் மெண்ட்ஸ், நாகர்கோவில் | மதிப்பீட்டுத்தொகை ரூ.20668/– |
| 2. | முகேஷ் இண்டஸ்ரிஸ் கேப் ரோடு, எடலக்குடி, நாகர்கோவில் | மதிப்பீட்டுத்தொகை ரூ25,263/– |

**அலுவலகக்குறிப்பு:–**

வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலை கொடுத்துள்ள ஸ்ரீஜோதி மார்டன் கிச்சன் எக்கியூப் மெண்ட்ஸ், நாகர்கோவில் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்றும் அதற்கான செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ளவும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதியின் படி பணி உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 377 –அனுமதிக்கப்பட்டது.

17. இந்நகராட்சியில் செயல்பட்டு வரும் அம்மா உணவகத்திற்கு பிப்ரவரி 2019 முதல் ஜனவரி 2020 வரை ஒரு ஆண்டிற்கு தேவையான தயிர், காய்கறிகள், மளிகைப் பொருட்கள், சமையல் எரிவாயு, கேஸ் சிலிண்டர், அரிசி மற்றும் அம்மா உணவகத்தில் பணிபுரியும் ஸ்ரீதுர்கா மகளிர் சுய உதவிக்குழு பணியாளர்களுக்கான மாத ஊதியம் ஆகியவைகளுக்குரிய உத்தேச செலவினம் ரூ.2400000/– க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.. 378 –அனுமதிக்கப்பட்டது.

18. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மைத்திட்டப்பணிகளை மேற்கொள்ள போதிய அளவு துப்புரவு பணியாளர்கள் இல்லாத காரணத்தினால் தேவைப்படும் துப்புரவு பணியாளர்கள் விவரம் கணக்கீடு செய்யப்பட்டு நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் செயல்முறை உத்தரவு ந.க.எண்..38162/பி3/2044–10, நாள்..22.01.2015ன் படி 75 பணியாளர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் செந்தர விகிதத்தில் தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்து தனியார் மூலம் ஒப்பந்த அடிப்படையில் (Out Sourcing ) பணியினை மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெறப்பட்டு, அதன் அடிப்படையில் கடநத் 01.03.2018 முதல் 28.02.2019 வரை பணிபார்க்க Southern Solid Waste Management Service Kanyakumari என்ற நிறுவனத்திற்கு 58 பணியாளர்களுக்கு பணி உத்தரவு வழஙகப்பட்டு பணிக்காலம் 28.02.2019 முடிவடைகிறது. அதன்படி நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களின் ந.க.எண்..38162/பி3/2044–10, நாள்..22.01.2015ன் படி மேற்கண்ட பணியை மூன்று ஆண்டுகளுக்கு பணியை தொடஙக அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒராண்டு காலத்திற்கு இப்பணியை அதே தொகையில் நீடித்து கொள்ள Southern Solid Waste Management Service Kanyakumari என்ற நிறுவனம் கடிதம் கொடுத்ததன் அடிப்படையில் பணியை மேற்கொள்ள கீழ்க்கண்டவாறு செலவினம் கணக்கிடப்படுகிறது.

| வ.எண் | விவரம் | மொத்த தொகை ரூ. |
|---|---|---|
| 1 | 58 பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.274/– வீதம் தினக்கூலி அடிப்படையில ஆண்டு ஒன்றுக்கான செலவினம் | 5721120/– |
| 2 | ESI EPF (17/36%) | 993186/– |
| 3 | Administrative Chargesfor Private Sector (10%) | 671430/– |
| 4 | ஓர் ஆண்டிற்கான செலவிம் மொத்தம் ரூ. | 7385736/– |

எனவே நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை உத்தரவின் படி இந்நகராட்சி 5,6,7,8,9,12,13,14,15,16,17,1819,20,21,22,23,24,25,26 மற்றும் 27 வார்டுகளிலும் திடக்கழிவு மே லாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதாரப்பணியினை மேற்கொள்ள 58 துப்புரவு பணியாளர்களை தினக்கூலி அடிப்படையில் நியமனம் செய்ய ஓர் ஆண்டிற்கான உத்தேச செலவினம் தொகை ரூ.7386000/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:-</u>**

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. செலவினதை பொதுநிதியில் இருந்து மேற்கொள்ளலாம், (அ) 14th Central Finance Commission நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

தீர்மான எண்.. 379 –அனுமதிக்கப்பட்டது.

19. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான 1 முதல் 27 வார்டு பகுதிகளில் அமைந்துள்ள அனைத்து குடியிருப்புகள், வணிக நிறுவனஙகள் மற்றும் அரசு அலுவலக வளாகஙகளில் டெஙகு நோய்த்தடுப்பு களப்பணிகள் மேற்கொள்ள தேவையான வருடாந்திர காலண்டர் மற்றும் smile Sticker ஆகியவைகள் தயார் செய்ய ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.52000/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:—</u>

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.. 380 —அனுமதிக்கப்பட்டது.

20. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு, நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் செயல்முறைகளின் உத்தரவு ந.க.எண்..2288/2019/பி3, நாள்..26.03.2019 ன் படி திடக்கழிவு மேலாண்மை விதிகள் – 2016 பிரிவு எண்..15ன் படி சிவகஙகை நகராட்சியின் திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டஙகள் வகுக்கப்பட்டு மாவட்ட அரசிதழில் வெளியிட கோரி அனுமதி வழஙகப்பட்டுள்ளது. அதன்படி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டஙகளை மாவட்ட அரசிதழில் வெளியிட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக்குறிப்பு:—</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. சிவகஙகை நகராட்சி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி நாள்..29.03.2019ன் படி திடக்கழிவு மேலாண்மை கொள்கை மற்றும் திட்டஙகளை மாவட்ட அரசிதழில் வெளியிடுவதை மன்றம் அனுமதிக்கலாம்.

தீர்மான எண்.381 —அனுமதிக்கப்பட்டது.

21. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு பிளாஸ்டிக் மேலாண்மை விதிகள் 2016ன் படி சிவகஙகை நகராட்சி எல்லைக்குப்பட்ட பகுதிகளில் ஒருமுறை பயன்படுத்தப்பட்டு தூக்கி எறியக்கூடிய பிளாஸ்டிக் பொருட்கள் பற்றிய விவரஙகளை பொதுமக்களுக்கும் மற்றும் வணிக நிறுவனஙகளுக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்த 5000 எண்ணிக்கையிலான துண்டு பிரசுரஙகள் ( Bit- Notice ) அச்சிட்டு விநியோகம் செய்ய ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.17000/—ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.. 382 –அனுமதிக்கப்பட்டது.

22. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப்பிரிவு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் ந.க.எண்..2537/ஜே1/2017,நாள்..14.02.2017ன்படி இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளான 1 முதல் 27 வார்டுகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் வணிக நிறுவனஙகளில் டெஙகு, சிக்கன்குனியா மற்றும் கொசுக்களினால் உருவாகும் தொற்று நோய்கள் பரவாமல் தடுக்கும் பொருட்டு கொசு ஒழிப்பு மற்றும் கொசுப்புழு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள 55 மஸ்தூார் பணியாளர்களை தற்காலிகமாக நியமனம் செய்யப்பட்டு 10/2018 முதல் 01/2019 வரை 4 மாதஙகளுக்கு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது. மேலும் பொது சுகாதார அவசியம் கருதி தொடர்ச்சியாக 02/2019 முதல் 05/2019 ( நான்கு மாதஙகள்) வரை தற்காலிகமாக மஸ்தூார் பணியாளர்களை நியமனம் செய்துகொள்ளவும், 02/2019ம் மாதம் முதல் மஸ்தூார் பணியாளர்களின் ஊதியத்தில் EPF 12.46% பிடித்தம் செய்து கொள்ளவும், ஒரு நபருக்கு நாள் ஒன்றுக்கு ரூ.274/–வீதம் 26 நாட்களுக்கு (மாதம் ஒன்றுக்கு) ரூ,7124/– வீதம் 55 பணியாளர்களுக்கு மொத்தம் ரூ.1567280/–ற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:–**

1. பொதுசுகாதார அவசியம் கருதி டெஙகு தடுப்பு பணிகளை மேற்கொள்ள 55 தற்காலிக பணியாளர்களை நியமனம் செய்துகொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

தீர்மான எண்.. 383 –அனுமதிக்கப்பட்டது.

23. சிவகஙகை நகராட்சி பொது சுகாதாரப் பிரிவு 27 வார்டுகளில், பேருந்து நிலையம் ஆகிய பகுதிகளில் உள்ள வீடுகள் வணிக நிறுவனஙகள், கட்டிடஙகளுக்கு சென்று 75 துப்புரவு பணியாளர்களை கொண்டு குப்பைகளை சேகரித்து மக்கும் குப்பை மக்காத குப்பை என பிரித்து துப்புரவு பணியாளர்களை கொண்டு ஒப்பந்ததாரரோ ஒப்பந்த அடிப்படையில் மேற்கண்ட குப்பைகளை நகராட்சி குறிப்பிடும் இடத்தில் கொட்ட வேண்டும். வார்டுகளில் உள்ள அனைத்து தெருக்களில் திறந்த வெளி மற்றும் அனைத்து வகை கால்வாய்களை சுத்தம் செய்தல், பேருந்து நிலைய கழிப்பறை பராமரித்தல், தெரு பெருக்குதல், நகராட்சி அலுவலர்கள் தெரிவிக்கும் இதர அவசர பணிகள் செய்தல், சீருடை காலணி வாஙகுதல் அரசு விதிகளின் படி இ.எஸ்.ஐ, இ.டி.எப், இன்சூரன்ஸ், வரிகள் உள்ள பணிகளை மேற்கொள்ள 27.02.2019 அன்று நடைபெற உள்ள ஒப்பந்தப்புள்ளி விளம்பரத்தை நமது அம்மா நாளிதழில் விளம்பரம் செய்த வகையில் விளம்பரக் கட்டணம் தொகை ரூ.55283/– Account Advertising agencies நிறுவனத்திற்கு வழஙக மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்.. 384 —அனுமதிக்கப்பட்டது.

24. சிவகஙகை நகராட்சி வரவு செலவு திட்டம் 2019—2020ம் (Budget 2019—2020) ஆம் ஆண்டு அறிக்கை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**<u>அலுவலகக்குறிப்பு:—</u>**

மன்றம் அனுமதிக்கலாம்

தீர்மான எண்..385—அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர்

சிவகஙகை நகராட்சி